பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

When only the best is Good Enough BUY



Solide Pumps

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ. 1-50

SOLIDE PRODUCTION
சீனுவில் இருந்து இறக்குமதி செய்த வேகம் குறைந்த மோட்டர்கள்
1/4 H.P இல் இருந்து 3 H.P வரையில்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
"சொலிட்" பண்டத்தரிப்பு அல்லது லிங்கம்ஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஸு பங்குனி மீ 08 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 02 (21 - 03 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:33

★ வடக்கு, கிழக்கிற்கு

# கனேடிய உதவி அரசியல் ஸ்திரம் ஏற்பட்டால் மட்டுமே!

## சர்வதேச ஏஜன்சித் தலைவி தகவல்

கொழும்பு, மார்ச் 21

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசியல் ஸ்திர நிலைமை உருவாகிய பின்னரே, கனடா அப்பகுதிகளின் புனர் நிர்மாணத்துக்கு ஒதுக்கிய ஒரு கோடி இருபது லட்சம் டாலர்களையும் வழங்கும். அதற்கு முன்னர் வழங்குவது சாத்தியமாகாது.**

இவ்வாறு கனடாவின் சர்வதேச அபிவிருத்தி ஏஜன்சியின் தலைவி மார்கரட் காட்லி கார்ல்ஸன் கொழும்பில் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குப் பகுதியின் புனர் நிர்மாணத்துக்காக ஒதுக்கிய நிதி அந்த நோக்கத்துக்கே பயன்பட வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

அரசியல் ஸ்திர நிலை ஏற்படாமல் புனர் நிர்மாண, புனர் வாழ்வுப் பணிகளைச் செய்வது பயனற்றது. ஆகையாலேயே நாம் இந்த முடிவுக்கு வந்திருக்கிறோம் — என்றும் அவர் தெரிவித்தார்.

குறுகிய கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்த இவர், கடந்த வெள்ளிக்கிழமை நாடு திரும்பினார்.

அதற்கு முன்னர் அவர் கொழும்புச் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனரமைப்பு, புனர் வாழ்வுப் பணிகளுக்கு கனடா 1 கோடி 20 லட்சம் டாலரை அளிக்க முன்வந்துள்ளது.

இதில் 20 லட்சம் டாலர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கப் பயன்படுத்தப்படும்.

மேலும் வெகுவாகப் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இன்னும் அமைதி திரும்பவில்லை.

ஆகையினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உதவிகள் வழங்கப்படாமல் போய்விடுமோ என்று சந்தேகப்படத் தேவையில்லை.

சகஜநிலை ஸ்திரமானவுடன் உறுதியளிக்கப்பட்டபடி வடக்கு கிழக்கிற்கு கனடாவின் உதவி கிடைக்கும். புனர் நிர்மாணம், பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர் நிர்மாணம் முழுமூச்சுடன் இடம்பெறவேண்டும் என்பதில் கனடா அக்கறை கொண்டுள்ளது—

இப்படி அபிவிருத்தி ஏஜன்சித் தலைவி மார்கரட் காட்லி கார்ல்ஸன் தெரிவித்தார். (ஓ-எ)

## யாழ்நகர் நேற்று வழமைக்குதிரும்பியது

யாழ்ப்பாணம், மார்ச் 21

தொடர்ச்சியான ஐந்து நாட்கள் ஸ்தம்பித நிலையின் பின்னர் யாழ்நகர் நேற்று வழமைக்குத் திரும்பியது.

நேற்று ஞாயிற்றுக்கிழமையான போதிலும் பெரும் எண்ணிக்கையில் மக்கள் நடமாட்டத்தை நகரில் காணக்கூடியதாக இருந்தது. பெரும்பாலான கடைகளும் திறந்திருந்தன. தனியார்கல்வி நிலையங்களில் வழமையான வகுப்புக்கள் நேற்று முதல் ஆரம்பமாகின. (இ-10)

## 7 கோடி டாலர் கடன் உதவி

வாஷிங்டன், மார்ச் 21

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களின் புனரமைப்பு புனர்வாழ்வுக்கென சர்வதேச அபிவிருத்தி ஏஜன்ஸி 7 கோடி 80 லட்சம் பணத்தைக் கடனாக இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது.

இடம் பெயர்ந்த சுமார் 5 லட்சம் மக்களை மீளக்குடியமர்த்துவது—

பாதிக்கப்பட்ட இடங்களின் பொருளாதாரத்துக்கு புத்துயிர் கொடுப்பது—

பொதுப் பணிகளை மீண்டும் சீரமைப்பது—

ஆகியவற்றுக்கு இக்கடன் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இக்கடனை 40 ஆண்டு காலத்தில் இலங்கை திருப்பிச்செலுத்தவேண்டும். (அ-எ)

### அலுவலக இடம் மாற்றம்

வரையறுக்கப்பட்ட
ஹட்டன் நஷனல் வங்கி
(HATTON NATIONAL BANK LTD)

மேற்படி வங்கியின் யாழ்.கிளை இல 54 ஸ்ரான்லி வீதியிலுள்ள தற்போதைய தற்காலிக அலுவலகக் கட்டிடத்திலிருந்து

இல. 212, 214
ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கிளையின் புதுப்பிக்கப்பட்ட நிரந்தர அலுவலகக் கட்டிடத்திற்கு

வாடிக்கையாளரின் வசதி கருதி எதிர்வரும் **23 - 03 - 1988 புதன்கிழமை முதல்** இடம்மாற்றம் செய்யப்படுகிறது என்பதனையும், அன்று முதல் வங்கியின் அனைத்து அலுவல்களும் மேற்படி ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அலுவலகத்தில் வழமைபோல் நடைபெறும் என்பதனையும் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

— முகாமையாளர்

### சுபநேரம்

21-03-1988
பங்குனி 8
திங்கட்கிழமை

சுபநேரம்:
12.17 முதல் 1.47 வரை

ராகுகாலம்:
7.47 முதல் 9.17 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

சதுர்த்தி விரதம்

## 5 தடவைகளுக்கு மேல் இரத்த தானம் செய்தால் பதக்கம் இடைக்கும்!

கொழும்பு, மார்ச் 21

ஐந்து தடவைகளுக்கு மேல் இரத்த தானம் செய்பவருக்கு விசேட பதக்கம் ஒன்று வழங்கிக் கௌரவிக்கப்படும்.

இரத்ததானம் செய்வதற்கு மக்களைத் தூண்டும் ஒரு நடவடிக்கையாக இப்படித் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்துவின் திட்டம் இது. அமைச்சர் அத்தபத்துவே ஐந்து தடவைகளுக்கு மேல் இரத்ததானம் செய்திருக்கின்றார். இதற்காக வெளிநாடு ஒன்று அவருக்கு பதக்கம் அளித்துக் கௌரவித்துள்ளது (ஓ-எ)

## திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

கொழும்பு, மார்ச் 21

திறந்த பல்கலைக்கழகத்தின் தமிழ் பிரதேசப் பிரிவுகளுக்கு விரிவுரையாளர்களின் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு டிப்புளோமா பரீட்சையில் மெரிட் சித்தியடைந்தவர்கள் உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு திறந்த பல்கலைக்கழகங்களின் டிப்புளோமா பிரிவு பொறுப்பாளர்களில் ஒருவரான ஜனாப் எம். இஸ்மாயில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு மட்டும் 15 விரிவுரையா

[4ஆம் பக்கம் பார்க்க]

புதிய உபவேந்தர் பதவிக்கு

## வித்தி உட்பட மூவரின் பெயர்கள் சிபார்சு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ் பல்கலைக்கழகப் புதிய உபவேந்தர் பதவிக்குத் தற்போதைய உபவேந்தர் உட்பட மூவரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் யாழ் பல்கலைக்கழகக் கவுன்சில் கூடி இந்த மூவரையும் தெரிவு செய்ததாக அறியவருகிறது.

தற்போதைய உபவேந்தரின் பதவிக்காலம் முடிவடைவதால் இந்தத் தெரிவு இடம்பெற்றது.

தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் சு. வித்

(4-ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் உட்பட

## பெரிய தேர்தல் மாவட்டங்களின் எல்லைகள் திருத்தி வகுக்கப்படும்

கொழும்பு, மார்ச் 21

பெரிய தேர்தல் மாவட்டங்களின் எல்லைகளைத் திருத்தி வகுக்க அரசு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கெனத் தெரிவு செய்யப்பட்டு உள்ள மாவட்டங்களில் ஒன்று யாழ்ப்பாணமும் ஆகும்.

ஏனைய தேர்தல் மாவட்டங்கள் வருமாறு:

கொழும்பு கம்பஹா களுத்துறை, கண்டி, குருணாகல, இரத்தினபுரி.

கொழும்பு மாவட்டத்தில் 21 எம். பிக்கள் உள்ளனர்.

புதிய திட்டத்தின் கீழ் இம்மாவட்டம் மூன்று வலயங்களாகப் பிரிக்கப்படும்.

பத்து முதல் இருபது எம். பிக்களைக் கொண்ட ஏனைய மாவட்டங்கள் இரண்டு வலயங்களாகப் பிரிக்கப்படும்.

இது சம்பந்தமாக அர

(4-ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசாங்கம் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும்

### ஆலோசனைக் கூட்டத்தில் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 21

பொது அமைப்புக்களும் பொதுமக்களும், விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களது கருத்தை நோக்கங்களை அறிவதற்காக இந்திய அரசு யுத்த நிறுத்தம் ஒன்றை உடனடியாகப் பிரகடனம் செய்ய வேண்டும்.

இவ்வாறு சமாதான நீதிவான் திரு. வ. சிவபாலசிங்கம் ஆலோசனை தெரிவித்தார்.

யாழ்: வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அவரது கருத்துக்கு அங்கிருந்த பலரும் ஆதரவு தெரிவித்தனர்.

அவர் மேலும் தெரி

(4-ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை முதலிடம்

கொழும்பு, மார்ச் 21

இஸ்ரவேலிய இராணுவப் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஆசியாவிலே அதிக நன்மைகளைப் பெற்ற நாடு இலங்கை என்று அறிவிக்கப்பட்டது.

இஸ்ரவேலிய அறிக்கையின்படி 1987 இல் 64 இலங்கையர் இராணுவப் பயிற்சி பெற்றனர். (ஓ-எ)

# சுட்டுக் கொலையுண்ட இளைஞர்கள் பலருக்கு

## பத்திரம் வழங்க முடியாத நிலை?

கொழும்பு, மார்ச் 21

பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட நூற்றுக்கும் அதிகமான சிங்கள இளைஞர்களுக்கு மரண அத்தாட்சிப் பத்திரத்தை எவ்வாறு வழங்குவது என்று தெரியாமல் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினர் திண்டாடுவதாக அறியவருகிறது.

ஜனதா விமுக்திப் பெரமுன மற்றும் சிங்களத் தீவிரவாதஇயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் அண்மைக் காலங்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இவர்களது கொலை குறித்து விசாரணை எதுவும் நடத்தப்படவில்லை.

இவ்வாறு கொலையுண்டவர்களின் பட்டியல் ஒன்று பதிவாளர் நாயகம் பகுதிக்குக் கிடைத்திருக்கிறது. நாம் சம்பந்தப்பட்டவர்களுக்கான மரண அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளதாம்.

ஆனால்—

மேற்படி நபர்கள் குறித்து பெயரைத் தவிர்ந்த வேறெந்த விவரமும் குறிப்பிடப்படாமையினால் இறப்புப் பதிவு மரண அத்தாட்சிப் பத்திரம் என்பவற்றை எழுத இயலாமல் பதிவாளர் நாயகம் பகுதி திண்டாடுவதாக மிக நம்பிக்கையாக அறிய வருகிறது.

பாதுகாப்புத்துறை வட்டாரங்களால் வழங்கப்பட்ட பட்டியலிலுள்ள பெயர்கள் அனைத்தும்சிங்கள இளைஞர்களுடையவை என்றும், அவை கொலையுண்ட பின்னர் அடையாளம் காணப்படாதவர்களுடையவை என்றும் மேலும் சொல்லப்படுகிறது. (அ-9)

### சென்னை விஜயம்

ஜனாதிபதி வெங்கட்ராமன் இன்று திங்கள் சென்னைக்கு விஜயம் செய்கிறார்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறும் வைபவம் ஒன்றில் ஜனாதிபதி இன்று காலை பங்குபற்றுவார்.

(இ-எ)




குடும்பக் கட்டுப்பாட்டுக்குக் காசு குடுக்கிற காலம்போய், இரத்த தானத்துக்குப் பதக்கம் குடுக்கிறகாலம் வந்திருக்குதோ இப்ப ...?

## விசா பெற வருபவர் தனியாக வந்தால் போதும்

### பிரிட்டிஷ் தூதரகம் அறிவிப்பு

கொழும்பு மார்ச் 21

பிரிட்டனுக்கு விசா பெறுவதற்காகத் தூதராலயத்துக்கு வருபவர்களைத் தனியாக வரும்படி கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரகம் கேட்டுக்கொண்டுள்ளது.

பிரிட்டன் தூதராலயத்துக்கு ஒருவர் விசாவேண்டி விண்ணப்பித்தால் அவர் நேர்முகப் பரீட்சைக்காக ஒரு குறிப்பிட்ட திகதியில் அழைக்கப்படுவார்.

அவ்வாறு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வருபவர்களுடன் துணையாகப் பலர் வருவதால் ஏற்படும் இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காகவே தூதராலய அதிகாரிகள் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்கள்.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருபவர்கள் மொழிப் பிரச்சினைக்காக மொழிபெயர்ப்பாளர்களை உடன் அழைத்துவரவேண்டிய தேவை இல்லையென்றும் தூதராலயத்தில் நன்கு பயிற்சி பெற்ற மொழிபெயர்ப்பாளர்கள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்கள் பிரிட்டிஷ் தூதராலயத்தின் தகவல் பிரிவினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஓ-3)

### யாழ். ஆஸ்பத்திரி தண்ணீர் குழாய் திருட்டு

யாழ்ப்பாணம் மார்ச் 21

யாழ் ஆஸ்பத்திரியில் உள்ள தண்ணீர் குழாய்களை திருடிய நபர் ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடைபெற்றது

(இ-10)

## சற்றடே றிவியூ

SATURDAY REVIEW

கொழும்பிலிருந்து பதிப்பிக்கப்பட்டு 1-2-88 திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட விசேஷ பதிப்பு "சற்றடே றிவியூ"வும், அதன் பின் வெளியிடப்பட்டவைகளும், இக்கம்பனியால் அங்கீகரிக்கப்படவில்லை.

கொழும்பிலிருந்தோ, வேறு இடத்திலிருந்தோ, எந்த விசேஷ பதிப்பையும் பதிப்பிக்கவோ, வெளியிடவோ, ஒருவருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை

"சற்றடே றிவியூ"வின் பதிப்பாளர் திரு எம். சுந்தர ஜநாயகம் அவர்களே.

மேற்படி பத்திரிகையினைப் பதிப்பித்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது

"சற்றடே றிவியூ" மீண்டும் பதிப்பிக்கப்படும் திகதி பத்திரிகை மூலம் அறிவிக்கப்படும்.

நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட்,
(NEW ERA PUBLICATIONS LIMITED.)
118, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(2093)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Uplands Farm Ltd கோழிக் குஞ்சு விநியோகம். 23 ஆம் திகதி புதன்கிழமை (Lohmann) சேவல் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். விலை ரூ 4 00 முன்கூட்டியே பதிவு செய்க இல 9 குராலத்தை ரோட், (சுந்தையா லேன்) சுன்னாகம் (ஸ்டேஷனுக்கு அருகாமையில்) (2082

**காணி விற்பனைக்கு**

சுந்தராமை யில் பல வித வசதிகளுடனும் பின்வரும் காணிகள் விற்பனைக்கு உண்டு 3 பரப்பு வீடு கட்டக்கூடிய காணி 2 பரப்பு 1½ குளி வீட்டுடன், 5 பரப்பு 1½ குளி நெல்வயல். தொடர்பு கொள்ளவும்: சி. முருகேசு. பொலீஸ் பென்ஷனர் சுந்தரோடை (பருத்தி ஓடை) (2036)

மாவிட்டபுரம் காங்கேசன்துறை வீதி பெரிய மதவடியில் ஸ்ரேட்டுக் கரைக் காணி 5 பரப்புக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொழிற்சாலை அமைக்கவோ, வீடு கட்டவோ உகந்தது தொடர்பு: ப. வேலுப்பிள்ளை, சைவக்கடை, மாவிட்டபுரம். (2651)

மானிப்பாய் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்குத் தொடர்பு வே. சந்தையா பாஸ்கர பவனம் வண்ணை மேற்கு ஆனை கோட்டை. (2652)

**மணமகள் தேவை**

வெளிநாட்டில் Master Degree (நிர்வாகத்துறை) படித்துக்கொண்டிருக்கின்ற வேளாளகுல றோமன் கத்தோலிக்க 33வயதுடைய 5' 3'' உயரமுள்ள மணமகனுக்கு அழகுள்ள B Sc அல்லது B. Com. பட்டதாரி தேவை: இதற்கொத்த ஆங்கில தராதரம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். லீவில் வந்துள்ள மணமகனுடன் வெளிநாடு செல்லக் கூடியவர் பட்டுமே விண்ணப்பிக்கவும். c/o 84 உதயன், 15 2ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (1847

### சேவை

யாழ். சைனீஸ் ரெஸ்ரோறன்ற் (முதலாம் குறுக்குத்தெரு) தினசரி காலை 10 மணிதொடக்கம் மாலை 6 – 30 மணிவரை திறந்திருக்கும் சைனீஸ் ரேஸ்ரோறன் புதன்கிழமைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மட்டும் பெற்றுக் கொள்ளலாம் அல்லது முன்கூட்டி ஓடர் செய்தும் பெற்று கொள்ளலாம். (1906)

**TYPEWRITER**

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises. 39 / 17. 3rd Lane, Power House Road, Jaffna (Near Samy & Co.) (1803)

### தேவை

கொக்குவில் பிட்டி / பம்பலப்பிட்டி / வெள்ளவத்தை / டுப்ளிக்கேஷன் வீதியில் தனிப்பாதையுடன் மூன்று அறை கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 118, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம் (மக்கள் வங்கி முன்பாக) (1999)

ரியூட்டரிக்கு தேவையான வாங்குகள் மேசைகள் (மூன்று) விற்பனைக்கு உண்டு தொடர்பு; 404, டிக்கா கிறீமகவுஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2000)

1ம் 2ம் 3ம் 4ம் குறுக்குத் தெருவில் அலுவலகமாகப் பாவிப்பதற்கு ஒரு நல்ல வீடு தேவை விண்ணப்பிக்கவும். விளம்பர இல 96 உதயன், யாழ்ப்பாணம். (2084)

Ford Prefect - 1 Siயும் அதற்கு மேற்பட்ட இலக்க முறையான கார் தேவை. முழு விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். Omega, Manipay. Road, Jaffna. (2089)

**மணமகன் தேவை**

27 வயதுடைய 5' 2'' உயரமுடைய இந்து வேளாள குல மணமகளுக்கு வெளிநாடு அல்லது உள்நாடு Accountant, Doctor, Engineer, உயர் தொழில் வாய்ப்புடைய மணமகனை எதிர்பார்க்கின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 96. C/o உதயன், யாழ்ப்பாணம். (2095)

**விண்ணப்பப் படிவம்**

பல்கலைக் கழக அனுமதிக்கான படிவம் விற்பனையாகின்றது நாயக பாலன் ஸ்ரோர்ஸ் மானிப்பாய் (2098)

### வகுப்புகள்

Radio. TV. Air Conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டர் மெக்கானிசம் வைண்டிங் Spoken English, Typing சிறந்த செய்முறை பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
Vispa Engineering And Hall 328, நாவலர் வீதி, (ஆனைப்பந்திச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (1940)

**கல்வி**

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 19 வருட அனுபவமுள்ள ஆசிரியரால் ஆரம்பத்திலிருந்து விசேட சித்திக்கு குறைந்த காலத்தில் நுணுக்கமான முறையில் கற்பிக்கப்படும் மற்றும் கொழும்பிலுள்ள பிரபல கல்லூரியில் கல்வி பயின்ற ஆசிரியரால் Spoken English-ம் சிறந்த முறையில் கற்பிக்கப்படும் ஆறுமுக நாவலர் 10 ச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (1990

**ரேனியோ**

தமிழ். ஆங்கிலம் தட்டச்சு (Typewriting) ரேனியோ வேலைகள் மற்றும் சகலவித அச்சுவேலைகளும் குறிந்த விலையில் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும் தயா அச்சகம், 138, நாவலர் ரோட். (மணிக்கூட்டுக் கோபுரச் சந்தி) யாழ்ப்பாணம்

**ரேனியோ**

[illegible] என்றும் வளர்ந்து வருகின்றது ரேனியோ வேலைகளுக்கு என்றும் நீங்கள் நாடவேண்டிய இடம்: கிளின்கட் இல 239 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு அனுபவமும், தகுதியும், திறமையும் உள்ளவர்கள் உடன் தேவைப்படுகிறார்கள்.

1. அச்சுக்கோர்ப்பாளர் (ஆண்கள் மட்டும்) [ தமிழ் & ஆங்கிலம் ]
2. புத்தகம் கட்டுபவர்
3. இயந்திர இயக்குநர் [பிளேட்டின் இயந்திரம், & ஹைடில்பேர்க் சிலிண்டர் ]

விண்ணப்பதாரர் தம்மைப் பற்றிய சகல விபரங்களும் கொண்ட விண்ணப்பத்துடன் கீழ்க் கண்ட விலாசத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்:-

**ஷப்ரு**
(வர்த்தக அச்சகப் பகுதி)
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# S. P. ANTON
வழங்கும்
## உடனடிப் பயண ஒழுங்குகள்

**i. சவூதி அரேபியா:**
Supervisors, Tally clerks, Drivers, Secretaries, Librarian, Painter, Carpenter, Mason, Computer operator, Cashier, Store keeper, Mechanics, Electrician, Firemen, Security, Guards Typists மற்றும் தொழிலாளர்கள், கிளீனர்கள், வீட்டு வேலையாட்கள் முதலிய வேலைவாய்ப்புகள் உண்டு.

**ii. அபுதாபி:**
**House Boys, Cleaners House Maids**
உடனடியாகத் தேவை.

**iii. HOUSE MAIDS:**
சிங்கப்பூர், கிறீஸ் முதலிய நாடுகளுக்கு ஆங்கில அறிவுடைய House maids உடனே தேவை.
சம்பளம் ரூ 3,500/- — 6,500/- வரை:

**iv. கப்பல் வேலைவாய்ப்புகள்:**
'Nomikos' மற்றும் தரமான கிரேக்கக் கப்பல்களில்.
OFFICER VACANCIES உடன், A/B Deck Boy Mess Boy, Wiper முதலிய வெற்றிடங்கள் உண்டு நம்பிக்கையுடன் பயணம் ஒழுங்குபண்ணித் தரப்படும்,

**v. கனடா பயண ஒழுங்குகள்:**
நம்பிக்கையான முகவர் மூலம், சிங்கப்பூரிலிருந்து சிறு குழுக்களாக கனடா பயணம் செய்வதற்கு நிச்சயமான ஒழுங்குகள் செய்து தரப்படும்.

மற்றும் சகல விவரங்களுக்கும் உடனே நேரில் தொடர்பு கொள்ளுங்கள்.

S. P. அன்ரன்
வேல் ஸ்ரோர்ஸ், மக்கள் வங்கி முன்பாக) ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
கொழும்பு முகவரி:
**S. P. Anton**
No: 273 Wolfendhal Street,
COLOMBO 13.
AL 137/ /88

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 23 - 3 - 1917
இறைவனடியில்: 02 - 04 - 1987
திதி: 21-03-1988

**சண்முகம் கந்தசாமி**
(இளைப்பாறிய உதவி ஆணையாளர் ஆட்பதிவு திணைக்களம்)
இப்பொழுதில் ஆருந்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டுவிட்ட எங்கள் அன்புத் தெய்வமே! நாங்கள் எங்களைவிட்டுப் பிரிந்தாலும் தங்களின் நினைவு நெஞ்சங்களில் கல்மேல் எழுத்துப்போல் என்றும் நிலைத்திருக்கும் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர்
பிள்ளையார் கோவில் வீதி, [illegible]
(2046)

## நோயாளர் ஏமாற்றம்

இந்திய சுசிலுவைச் சங்க வைத்தியக்குழு ஒன்று கடந்த 14 ஆம் திகதி அனலைதீவுக்கு வருகை தருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது எனினும் கடைசி நேரத்தில் வருகை ரத்துச் செய்யப்பட்டதால் நூற்றுக்கணக்கான நோயாளர்கள் பல மணி நேரம் காத்திருந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். (இ-18)

**சதிவழக்கு:**

## எதிரிகள் எழுவருக்கும் 3 மாதச் சிறை

கொழும்பு, மார்ச். 21
அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்த வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட ஏழு எதிரிகளுக்குத் தலா மூன்று மாதச் சாதாரண சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விமல் விக்கிரம சூரிய தண்டனையை விதித்தார்.
இவ் வழக்கில் மகரகம எச். பி திணேஸ் குணவர்த்தனவின் தம்பி ஆந்திசா குணவர்த்தன உட்பட 44 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது
ஏழுபேர் மட்டுமே கடந்த தவணையின் போது குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.
ஏனையோர் குற்றத்தை ஏற்றுக் கொள்ளவில்லை அவர்கள் மீது விசாரணை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## யாருடைய வானொலி?

யாழ்ப்பாணம், மார்ச்21
மல்லாகத்திற்கும்தெல்லிப்பளைக்கும் இடையில் கண்டெடுக்கப்பட்ட (ரூ-இன்-வண்) வானொலிப் பெட்டி ஒன்று காங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலை பாதுகாப்பு அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

மக்கள் முகம்

## பாரதி சனசமூக நிலையம்

காங்கேசன்துறை, மார்ச் 21
மயிலிட்டி வடக்கு பாரதி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் மயிலிட்டி பத்திரகாளி அம்மன் ஆலய முன்றலில் நடைபெற்றது.
பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவாகினர்.
தலைவர் திரு. வே. மாணிக்கன், உபதலைவர் திரு. கு. ரவி, செயலாளர் திரு. த குணசேகரம், உபசெயலாளர்திரு வ. த ராசிங், பொருளாளர் திரு. க சேவராசா, கணக்குப் பரிசோதகர் திரு. செ. சதீஸ்குமார், விளையாட்டுத்துறைத் தலைவர் திரு. வ தியாகராசா.
4 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவானது (இ-68)

## பாரதி பாஷிய பாடசாலை

கொக்குவில், மார்ச் 21
யாழ் பெரியகடை பாரதி பாஷிய பாடசாலையில் நடப்பு வருட அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள்.
தலைவர்:- திரு க. சிற்றம்பலம் (அதிபர்) செயலாளர் திரு. ந பாலச்சந்திரன், தனாதிகாரி ஜனாப் அ. லெ.மு. அப்துல் ஹலீம்.
நிர்வாகக்குழு உறுப்பினர்கள் திரு. க சிவலிங்கம், ஜனாப் எம். எஸ். அமீர், திருமதி எல். ஆர். மார்ட்டின் திரு வி. நிற்றஸ், திரு. எஸ் மாரிச்செட்டியார், திரு. [illegible] செட்டியார் திரு இ முத்து [illegible] செட்டியார்
(க-69)

**Institute of Engineering Technology**
11/3 Stanley Road, Jaffna.
12 வருடகால அனுபவமுள்ள ஸ்தாபனம். வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப் பெறக்கூடியதாக 3 மாதப் பயிற்சிகள் நடாத்தப்படும்.
- ✱ மோட்டார் பொறியியல் - Motor Machanism
- ✱ மின் இணைப்பு - Electrical Wiring
- ✱ வைண்டிங் - Winding

ஆரம்பம்:- 23- 03 - 1988

## ஈராண்டு நினைவஞ்சலி!



செல்வி: சேனாதிராசா பிரேமதரா
மண்ணில் மடியில்:- 10- 02- 1966
ஆழ்பவன் அழிப்பு:- 21- 03- 1986

ஒளி விளக்காய்ச் சுடர் விட்டு எங்கள் நெஞ்சில் நிறைந்த அன்புப் பிரேமாவே!
பெற்ற பொழுது பெரு மகிழ்ச்சி அடைந்தோம் பிரேமாவே!
அழகின் உருவாய் சிரிப்பில் நிறைமதியாய் பாசவிளக்காய் உதவியின் இருப்பிடமாய் எம்முன்னே திகழ்ந்தாய் பிரேமாவே!
கண்ணை இமை காப்பது போல் உன்னைக் காத்தோம் பிரேமாவே!
வீடுதேடி வந்த ஷெல் உன்னை ஒரு நொடியில் அழித்ததுவே!
எம்மைப் பரிதவிக்க விட்டுச் சென்று ஈராண்டுகள் ஆனதுவே பிரேமாவே.
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உம் நினைவால் வாடும்
அப்பா, அம்மா, அத்தான், அக்கா, அண்ணா, உறவினர்கள்.
50/25 வயிரவர் கோவில் லேன், சொட்டடி. (1972)

## 180 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி இராஜதுரை மகேஸ்வரி
பிறப்பு: 23 - 05 1942 இறப்பு: 21 - 10 - 1987

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்மையெல்லாம் வளர்த்து வையகத்தில் நற்பிரஜையாய் உலவவிட்ட எம் அன்னையே! என்றென்றும் எம் வாழ்வின், ஒளிவிளக்காய் இருந்து இறைவனடி சேர்ந்துவிட்ட உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகிறோம். எங்கள் உடல்கள் நீங்கும் வரை உங்கள் நினைவு எம் உள்ளத்தை விட்டு அகலாது
உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் 21 - 03 - 1988 இன்று நடைபெறும் அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம்
பிள்ளைகள்,
[2073] இ ஜெயகுமார், இ சுரேஸ்குமார், இ. இராஜ்குமார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

மனம் எப்பொருளில் கலந்திருக்கின்றதோ, அப்பொருளின் வடிவம் கொள்ளும்.

— சுவாமி கங்காதரானந்தஜி


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:-292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24806
யாழ்ப்பாணம். 22073
21.03.1988 உ பெ.இல: 23


## கன்னை பிரிகின்றதா?

**காணி** அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா அந்த வார மத்தியில் இந்தியாவுக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரும்பி விட்டார். அவர் ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாகச் சென்று இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியுடன் பேச்சுக்களை நடத்தினார்.

அவரது 'திடீர்' விஜயத்தின் பிரதான நோக்கம், கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களைப் பாதுகாப்பதற்கு ஸ்ரீலங்கா இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படைகளை உடன் சேவையில் ஈடுபடுத்துவது தான்.

அதற்கான அவசியம் ஏற்பட்டதாகக் காட்டிக் கொள்ளத் தேவையான சாதகமான சந்தர்ப்பமும் இருந்தது. அதாவது கிழக்கில் — திருமலையில் — திருமலை அனுராதபுர எல்லையில் — சிங்கள மக்கள் கொலை செய்யப்படுகிறார்கள் என்பதைக் காட்டியே கிழக்கில் ஸ்ரீலங்காப் படைகளின் சேவை தேவை என்பது நியாயப்படுத்தப்படுகிறது.

திருமலையில் கடந்த சில நாட்களாக நடக்கும் கொலைகள் தொடர்பாகப் போராளிகள் மீது தான் குற்றம் சுமத்தப்படுகிறது. தமது படைகளை முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கச் செய்யாமல் வெளியே கொண்டு வருவதற்காக, அரசாங்கத்தால் தூண்டப்பட்ட சக்திகளே அந்தக் கொலைகளைச் செய்திருக்கக் கூடும் என்று சந்தேகப்பட்டால் அதில் என்ன தப்பு? ஸ்ரீலங்கா அரசு இது விடயத்தில் காட்டிய அவசரம் அதனை மேலும் உறுதிப்படுத்துவதாகக் கருதினால் என்ன?

சிங்கள மக்கள் கொலைகளுக்கு யார் தான் காரணமாக இருப்பினும் கிழக்கில் உள்ள இந்திய அமைதிப் படையினர் மூலம் அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இலங்கை அரசு முயன்று இருக்கலாம் அல்லவா?

அதனைச் செய்யாமல், இந்திய அமைதிப் படைக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தானும் வழங்காமல், இந்தியாவுக்கு ஓடிப்போய்ப் பேசி, தனது படைகளை வெளியே சேவையில் ஈடுபடுத்த ஏற்பாடு செய்திருக்கிறது ஸ்ரீலங்கா அரசு.

இதன் விளைவாக ஏற்பட்டிருப்பது என்ன? சிங்களவர் பாதுகாப்புக்கு ஸ்ரீலங்காப் படைகளும், தமிழர் பாதுகாப்புக்கு இந்திய அமைதிப் படையும் என்ற கன்னை பிரிப்பு வெகு சதுரியமாக நடந்திருக்கின்றது. இது ஓர் ஆரோக்கியமான பாதுகாப்பு நடைமுறைக்கு வழி வகுக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இது வெறும் பாதுகாப்பு உத்தி (Strategy) மட்டுமல்ல. கிழக்கில், குறிப்பாக திருமலையில் சிங்களக் குடியேற்றங்களை பலப்படுத்தி நிலைப்படுத்தவும், புதிய குடியேற்றங்களைச் செய்யவும் எடுக்கப்படும் நடவடிக்கை என்றும் கருதலாம் அல்லவா?

திருமலையை முழுச் சிங்களப் பிரதேசம் ஆக்கி, கிழக்கில் தமிழர் பெரும்பான்மையினர் என்ற நிலையை மாற்றுவதற்கு எடுக்கப்படும் அரசியல் சதி என்றும் இதனைக் கொள்ளலாம்.

1948 இலிருந்து நடக்கும் கிழக்குக் குடியேற்றங்களை எடுத்துப் பார்த்தால் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளலாம்.

இந்தியாவும் இதனைப் புரிந்து கொண்டால் தான் அது தமிழ் மக்களின் உண்மையான காவலனாக மாற முடியும்.

வயாவிளான் சந்திப் பகுதியில்

# மக்கள் மீண்டும் குடியேற ஆரம்பம்

பலாலி, மார்ச் 21

வயாவிளான் சந்தியை அண்டிய பகுதிகளில் இருந்து கடந்த வருடத்தில் இராணுவ நடவடிக்கைகளால் வெளியேறிய மக்கள் மீண்டும் அப்பகுதிகளில் குடியேறத் தொடங்கியுள்ளனர்.

இந்திய அமைதிப் படையின் பாவனையில் இருந்த இப்பகுதி வீடுகள், மக்கள் குடியிருப்பதற்காக வீட்டுச் சொந்தக்காரர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இது வரை நடைபெறாதிருந்த 764 இலக்க தனியார், இ.போ.ச. போக்கு வரத்துக்களும் வயாவிளான் சந்திவரை விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு கிழக்குப் பகுதியிலும், பலாலி-யாழ் வீதிப்பகுதியிலும் உள்ள மேற்படி வீடுகளில் மக்கள் விரைவாகக் குடியேறி வருகின்றார்கள்.

### லொறி தீக்கிரை

கொழும்பு, மார்ச் 21

மட்டக்களப்பு, புணானையில் வைத்து லொறி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து சழிவுக் கடதாசிகளை ஏற்றிக்கொண்டு, வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்துக்குச் சென்ற லொறி ஒன்றே இப்படித் தீக்கிரையாக்கப்பட்டது. (ஓ-எ)

பற்றுக்குறை நிலவும் போது

## இட மாற்றம் ஏன்?

### அபி சபைக் கூட்டத்தில் கவலை

இங்கே ஆசிரியர் பற்றுக்குறை நிலவுகின்ற போது, இங்குள்ள ஆசிரியர்களை கொத்தணி அதிபருக்கு கூட தெரியாமல் இடமாற்றம் செய்வது கவலைக்குரியது.

அனலைதீவு மகாவித்தியாலய அபிவிருத்திச் சபைக் கூட்டம் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோதே இவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த பாடசாலையில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கின்றனர். ஆனால் போதிய ஆசிரியர்கள், தளபாடங்கள் இல்லை.

இவ்வாறு கூட்டத்துக்கு தலைமை வகித்த நயினாதீவு கொத்தணி அதிபர் திரு க. சண்முகநாதபிள்ளைக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இது சம்பந்தமாகக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு குறைகளை நிவர்த்தி செய்ய தன்னாலான முயற்சிகளைச் செய்வதாக கொத்தணி அதிபர் உறுதியளித்தார். (இ-க-18)

### போருட் ஸ்தாபனத்தின் உதவி

வடமராட்சி, மார்ச் 21

ஆதிகோவிலடி வாசிகளுக்கு 200 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் அடங்கிய 500 பொதிகளை போருட் ஸ்தாபனம் அண்மையில் வழங்கியது.

தற்போது ஆதிகோவிலடி வாசிகளின் நிவாரணப் பணிகளுக்காக நாற்பது லட்சம் ரூபா செலவு செய்து வரும் மேற்படி ஸ்தாபனம் அங்கு முக மிட்டு ஆக்கபூர்வமான வேலைகளைக் கவனித்து வருகிறது. (இ-160)

வெலிக்கடை தமிழ் அரசியல்

## கைதிகள் உண்ணாவிரதம்; நீதி அமைச்சின் கவனத்துக்கு

கொழும்பு, மார்ச் 21

வெலிக்கடைச் சிறையில் ஐந்து தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் சம்பவம் பற்றி நீதி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

சிறைச்சாலை ஆணையாளர் திரு. எச். ஜி. தர்மதாஸ கருத்துத் தெரிவிக்கையில் —

கடந்த மூன்று வாரங்களாக சுழற்சி முறையில் தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருந்து வந்தனர் என்று தெரிவித்தார்.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தங்களை விடுவிக்க வேண்டும் என்று வெலிக்கடை, மற்றும் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பிரதமர் ராஜீவ் காந்தி, ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஆகியோருக்கு ஏற்கனவே வேண்டுகோள் விடுத்து இருந்தனர்.

அதற்கு பதில் கிடைக்காதுபோகவே ஐந்து தமிழ்க் கைதிகள் கடந்த வியாழன் முதல் சாகும் வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

இதனிடையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதைத் துரிதப்படுத்தும்படி அமைச்சர் திரு செ. இராசதுரை ஜனாதிபதி ஜெயவர்த்தனா, நீதி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்ன ஆகியோரைச் சந்தித்துக் கேட்டுக்கொண்டார். (ஓ-9)

# தொழில் வாய்ப்பைச் சிந்தியாது தொழில்நுட்பவியலாளர்களை உற்பத்தி செய்கிறோம்

### கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 21

தொழில் வாய்ப்பு இருக்கின்றதா என்பதை கவனியாது வடபகுதியில் நாம் தொழில் நுட்பவியலாளர்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றோம்.

சமகோன் நிறுவனத்தின் வதிவிட திட்ட முகாமையாளர் திரு. எஸ். உருத்திரலிங்கம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைப் பொறியியலாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை 'தொழில் நுட்பக்கல்வியும் வேலைவாய்ப்பும்' என்னும் பொருள் பற்றி அண்மையில் நல்லூர் இந்து விடுதியில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது.

அதில்கலந்து கொண்டு பேசியபோதே திரு. உருத்திரலிங்கம் இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

நிறுவனங்கள் ஒப்பந்தங்களை வழங்கும் போது தனியார் ஒப்பந்தக்காரரின் வேலைக்குழுவில் தொழில் நுட்ப அதிகாரிகள் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதில்லை.

வெகு அருமையாகவே சில இந்த நிபந்தனையை விதிக்கின்றன. இந்நிலை நீடிக்கும் போது கட்டட நிர்மாணத் துறையில் தொழில் நுட்ப அதிகாரிகளுக்கு வேலைவாய்ப்பை எப்படி ஏற்படுத்திக் கொடுக்க முடியும்?

கட்டடத்திணைக்களம் தனது நடவடிக்கைகளை மாவட்ட ரீதியில் பரவலாக்க வேண்டும். அப்படிச் செய்தால் தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

இப்படி திரு. உருத்திரலிங்கம் தெரிவித்தார்.

கருத்தரங்குக்கு திரு. ஏ. வி. கனகராஜா தலைமை வகித்தார். மற்றும் பலரும் பேசினர். (ஓ-எ)

## மினிபஸ் பயணிக்கு ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மினிபஸ்ஸில் பிரயாணம் செய்த பிரயாணிக்குப் புதுவகையான அனுபவம் ஒன்று ஏற்பட்டது.

தன்னை ஏற்றிவந்த பிரயாணச் செலவு ரூபா 150ஐவிட பிரயாணப் பையைக் கொண்டு வந்ததற்காக அவர் 100 ரூபா கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேற்படி பிரயாணி ஒரு பிரயாணப் பையில் வீட்டுப் பாவனைப் பொருட்கள், உடுபுடவைகள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் போன்றவற்றைப் போட்டு மினிபஸ்ஸின் மேல் "கரியரில்" வைத்தாராம்.

மினிபஸ் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தவுடன் அந்தப் பையை எடுத்துத் தருபடி கேட்க அந்தப் பையைக் கொண்டுவந்ததற்கு 100 ரூபா தரும்படியும் இல்லாவிட்டால் பையைத் தரமுடியாது எனவும் மினிபஸ்ஸின் கிளினர் கூறினாராம்.

இதனால் 100 ரூபாவைக் கொடுத்தே அந்தப் பையை அவர் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. (ஓ-க)

### வீட்டில் வெடி மருந்து

கொழும்பு, மார்ச் 20

மாத்தளை மாவட்டத்தில் உக்குவளை என்னும் இடத்தில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 27 கிலோ வெடிமருந்துகள், மற்றும் உபகரணங்களைப் பொலீஸார் கைப்பற்றினர்.

வீட்டு உரிமையாளர் உட்பட நால்வர் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டனர். (ஒ-எ)

### பிரிவுபசாரம்

அனலைதீவு, மார்ச் 21

அனலைதீவு இளைப்பாறிய முன்னைநாள் கிராம சேவையாளர் திரு. சு. இரத்தினசபாபதிக்கு ஓர் பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்றது. திரு க. இளையதம்பி ஆசிரியர் தலைமை வகித்தார்.

பொது மக்கள் கலந்து கொண்டு அவரது சேவைகளைப் பாராட்டிப் பேசினர். (இ 18)



**பொய்யாமொழி**

**குறள்:**

குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்

**பொருள்:**

ஒருவன் சோம்பலை ஆளுந்தன்மையை மாற்றி விட்டால் அவனுடைய குடியிலும் ஆண்மையிலும் வந்த குற்றம் தீர்ந்துவிடும்.

### பாதயாத்திரை

சாவகச்சேரி, மார்ச் 21

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கம் மூன்றாவது பங்குனித் திங்களை ஒட்டி பன்றித் தலைச்சி அம்மன் ஆலயத்திற்குப் பாத யாத்திரையை மேற்கொள்கின்றது.

காலை ஏழு மணிக்கு சாவகச்சேரி சிவன்கோவிலில் இருந்து சங்கத் தலைவர் ஆதபஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா தலைமையில் பாதயாத்திரை ஆரம்பமாகும். (இ-31)

பஞ்சாப் படுகொலைகள் தொடர்கின்றன

# சீக்கியத் தீவிரவாதிகள் மீது பிரதமர் கண்டனம்

புதுடில்லி மார்ச் 20

இந்திய அரசின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்த சீக்கியத் தீவிரவாதிகள் தவறி விட்டனர் என்று பிரதமர் ராஜீவ் காந்தி குற்றம் சாட்டினார்.

பஞ்சாப் மாநிலத்தில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது அதிகரித்து வருவதாக செய்திகள் வெளிவருவது பற்றி பிரதமர் கருத்து வெளியிட்டார்.

அப்போது தான் மூன்று சண்டவர் குற்றஞ் சாட்டினார்.

சீக்கிய மதகுருமார்கள் பலரை சிறையில் இருந்து விடுவித்தேன். சீக்கியத் தீவிரவாதிகள் வன் செயலைக் கைவிட்டால் அவர்களுடன் பேச்சுக்களை நடத்தத் தயாராக இருப்பதாக அறிவித்தேன். இப்படியான சாதகமான நிலைப்பாட்டை மத்திய அரசு எடுத்தும், சீக்கியத் தீவிரவாதிகள் சமரசப் போக்கைக் கடைப்பிடிக்கின்றார்கள் இல்லை.

இப்படி பிரதமர் காந்தி தெரிவித்தார்.

### தலாய்லாமா மீது சீனா கண்டனம்

பீகிங், மார்ச்20

சீனாவை பிளவு படுத்தும் தலாய்லாமாவின் முயற்சியை அனுமதிக்க முடியாது என்று சீன ஜனாதிபதி தெரிவித்தார்.

திபெத் பிரச்சினையை வைத்து லாஸாவில் உள்ள சிலரும் வெளி நாடுகளில் உள்ள சிலரும் சேர்ந்து சீனாவைப் பிளவு படுத்தி விடலாம் என்று நினைக்கின்றனர் என்றும் சீன ஜனாதிபதி தெரிவித்தார். [எ]

## வளைகுடாவில் முமமுனைகளிலும் யுத்தம் தீவிரம்

தெஹ்ரான், மார்ச் 20

வளைகுடாவில் ஈரான், ஈராக் நாடுகளுக்கிடையேயான யுத்தம் சகல முனைகளிலும் தீவிரமாக இடம் பெற்று வருகின்றது.

கடல், தரை, ஆகாயப் பிராந்தியங்களில் இரு நாடுகளும் யுத்தத்தை விஸ்தரித்துள்ளன.

ஈராக்வெள்ளிக்கிழமை 9 ஏவுகணைகளை தெஹ்ரான் மீது ஏவியது.

வளைகுடாவில் எண்ணை ஏற்றிச் செல்லும் கப்பல்கள் மீது இரண்டு நாடுகளும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன ... அதிகரிக்கப்பட்ட ... (எ)

தென் கொரியா:

### ஆளும கட்சியைத் தோற்கடிக்க எதிர்க் கட்சிகள் இணையும்

எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமையை உருவாக்குவதற்காக சமாதான, ஜனநாயகக் கட்சித் தலைவர் பதவியில் இருந்து கிம்—டே யங் இராஜினாமாச்செய்து விட்டார்.

ஏற்கனவே இன்னொரு எதிர்க்கட்சியான 'மீண்டும் இணையும் ஜனநாயக'க்கட்சியின் தலைவர் பதவியில் இருந்து திரு கிம்—யங்—ஸாம ராஜினாமாச் செய்தார்.

"எமது ராஜினாமாக்கள் எதிர்க்கட்சிகளை ஒன்றுக்கு எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் ஆளும் ... வேண்டும்" — ... எதிர்க்கட்சித் தலைவர்களும் தெரிவித்தனர். (எ)

### விமான விபத்தில் 131 பேர் பலி!

கொலம்பிய விமானம் ஒன்று நொருங்கி விழுந்ததில் 131 பேர் உயிரிழந்தனர். இவர்களில் இரண்டு உதைபந்தாட்டக் குழுக்களின் வீரர்களும் அடங்கியிருந்தனர்.

கடந்த வியாழன் வெனிசுலா எல்லைப் புறத்தில் உள்ள குக்குட்டா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சில நிமிடங்களில் விமானம் தீப்பற்றி எரிந்து விழுந்தது. (எ)

# இஸ்லாமிய அமைப்பில் உறுப்புரிமை கோரி விண்ணப்பம்

அம்மான் மார்ச் 20

இஸ்லாமிய நாடுகள் அமைப்பில் உறுப்பினர் அந்தஸ்து கோரி மொரோ தேசிய விடுதலை முன்னணி விண்ணப்பித்திருக்கின்றது.

பிலிப்பைன்ஸில் இம்முன்னணி தனிநாடு கோரி ஆயுதக் கிளர்ச்சி நடத்தி வருவது தெரிந்ததே. இது ஒரு முஸ்லிம் தீவிரவாத அமைப்பு ஆகும்.

இஸ்லாமிய நாடுகள் அமைப்பில் 46 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

1974 இல் இருந்து மொரோ தேசிய விடுதலை முன்னணி அவதானிகள் அந்தஸ்து வகித்து வருகின்றது.

இப்போது முழு உறுப்பினர் அந்தஸ்து கோரி 10 லட்சம் கையொப்பத்துடன் விண்ணப்பித்துள்ளது. (எ)

**வெளி உலகில்**

## பலஸ்தீனியர்களை உயிருடன் புதைத்த இஸ்ரவேல் சிப்பாய்கள்

டெல்அவிவ், மார்ச் 20

நான்கு பலஸ்தீனியர்களை உயிருடன் புதைக்க முயற்சித்த குற்றத்துக்காக இரண்டு இஸ்ரவேலிய சிப்பாய்களுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இஸ்ரவேல் 1967 யுத்தத்தில் கைப்பற்றிய மேற்குக் கரையோரப் பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பலஸ்தீனியர்கள் நால்வரையும் முதலில் சிப்பாய்கள் நிலத்தில் படுக்க வைத்தனர். பின்னர் புல்டோஸரினால் மண்ணைக் கொண்டுவந்து அவர்கள்மீது கொட்டி மூடினர்.

பின்னர் சிப்பாய்கள் சென்றுவிட்டனர். அதன் பிறகு ஊரர் மக்கள் திரண்டு வந்து மண்ணை அகற்றி நால்வரையும் மீட்டனர். நால்வரும் மயக்கமடைந்த நிலையில் இருந்தனர். (எ)

## 1942இன் பின் இத்தாலி காணும் 48ஆவது அரசாங்கம்

ரோம், மார்ச் 20

அரசு ஒன்றை அமைக்கும்படி கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சித் தலைவர் சிரியாகோ டிமிட்டாவை இத்தாலிய ஜனாதிபதி கேட்டிருக்கின்றார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமைக்கப்படும் 48ஆவது அரசாங்கமாக இது அமையும்.

கியோவானி கோரியா தலைமையிலான அரசு கடந்த 11ஆம் திகதி இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்தே, திரு டி. மிட்டாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

60வயதான டிமிட்டா ஒரு தையல்காரனின் மகனாவார்.

தென் இத்தாலியைச் சேர்ந்தவரான இவர், கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் தலைவராக ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவு செய்யப்பட்டார்.

1987 தேர்தலில் இக்கட்சி 38 சதவீத வாக்குகளைப் பெற்றது.

திரு. மிட்டா அரசாங்கம் அமைப்பதைத் தான் எதிர்க்கப் போவது இல்லை என்று சோஷலிச கட்சித் தலைவர் திரு. கிராக்ஸி அறிவித்து உள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C. S. K.
Soap Nut Powder
சி. எஸ். கே. சீயாக்காய் பவுடர்
இது கலையில் உள்ள அழுக்கைப்போக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தை தருவதுடன் கூந்தலைச் சுருபையாகவும், நீண்டதாகவும் வளரச் செய்யும். கிடைக்கும் இடம்.
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
இல. 5 (76) பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

21.03.1988 திங்கட்கிழமை

KAILAS Coconut Oil
(PERFUMED)
சுகந்த வாசமுள்ள கைலாஸ் கோக்கனற் ஓயில் மூளை வளர்ச்சிக்கும் தேக ஆரோக்கியத்திற்கும், கூந்தல் வளர்ச்சிக்கும் உகந்தது
4 அவுன்ஸ் - 15/- 8 அவுன்ஸ் - 25/-
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச் சரக்கு வியாபாரம்)
இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

இன்று
மங்களகரமான
திறப்பு விழா
தரமான கலர், கறுப்பு வெள்ளை
புகைப்படங்களை
குறுகிய காலத்தில்
யாழ் மக்களுக்கு
பெற்றுத் தரவென உருவாகும்
புதியதோர் ஸ்தாபனம்



ஜெகன்
போட்டோ
JAEGAN
FOTO
இன்று
21 - 03 - 1988
பகல் 12-00 மணியளவில்
உயர் திரு.
S. தியாகராஜா
அவர்கள்
(ராஜா தியேட்டர் உரிமையாளர்)
ஆரம்பித்து வைப்பார்.
அத்தருணம்
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவரையும் கலந்து கொள்ளுமாறு
வேண்டுகின்றோம.
இங்ஙனம
தங்கள் நலவரவை நாடும்,
ஜெகன் போட்டோ
399, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## பெரிய தேர்தல்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சமைப்புச் சட்டத்திருத்தம் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என்றும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கையின் பின்னர் புதிய தேர்தல் வலயத்தில் எத்தனை எம்.பிக்கள் இருக்க வேண்டுமென்பதை தேர்தல் ஆணையாளரே தீர்மானிப்பார்.

இதற்கான அரசமைப்புச் சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்ட இரண்டு வாரங்களுக்கு இடையில் மூன்று பேர் கொண்ட எல்லை நிர்ணயக் குழுவை ஜனாதிபதி நியமிப்பார்.

குழு இரண்டு மாதங்களினுள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும். (ஒ-எ)

## பிரயாண ஒழுங்குகள்

### Vacancies in Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1. | AUTO இயந்திர வல்லுநர் | — | 750 SR |
| 2. | கனரக வாகன சாரதிகள் | — | 650 SR |
| 3 | LUBE தொழில் நிபுணர் | — | 750 SR |
| 4 | கனரக சாதன இயந்திர வல்லுநர் | — | 750 SR |
| 5. | மோட்டார் REWIND நிபுணர் | — | 750 SR |
| 6. | AUTO A/C தொழில் நிபுணர் | — | 850 SR |
| 7. | தகர வேலைக்காரர் | — | 700 SR |
| 8 | AUTO மின்சார தொழிலாளி | — | 700 SR |
| 9 | Wheel Balance and Align Spcialist | — | 800 SR |
| 10 | வர்ணம் தீட்டுவோர் | — | 650 SR |
| 11. | தட்டு, முட்டு, மெத்தை உறை போன்ற சாதனங்கள் அளிப்பவரின் தொழிலாளி | — | 800 SR |
| 12. | கருதியை அதிகரிக்கச் செய்யும் நிபுணர் | — | 800 SR |
| 13. | கமாஸ்தா | — | 650 SR |
| 14. | Plumber (காரியத்தினுல் குழாய்கள், கொட்டிகள் சீர் செய்வர்) | — | 650 SR |
| 15. | Welders | — | 650 SR |
| 16 | கடைச்சல் இயந்திர தொழில் நிபுணர் | — | 700 SR |
| 17. | தச்சு வேலைகாரர் (Carpenters) | — | 650 SR |
| 18. | மேசன் (Masons) | — | 650 SR |
| 19 | இயந்திர பொறியியலாளர் | — | 2200 SR |
| 20 | மின்னியல் | — | 2500 SR |
| 21. | மின் படவரைஞர் (Electrical Draughtsman) | — | 1500 SR |
| 22 | Electricians (மின்சார தொழிலாளி) | — | 700 SR |
| 23 | குளிரூட்டியியல் தொழில் நிபுணர் | — | 800 SR |
| 24. | Secretary / Typist | — | 800 SR |
| 25. | Telex Operator | — | 800 SR |
| 26 | தோட்டக்காரர் Gardeners | — | 350 SR |
| 27. | துப்பரவாக்கிகள் | — | 350 SR |

முக்கியகுறிப்பு:-

இவர்கள் யாவரும் 3-4 88 இல் எமது கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை செய்ய சமூகம் அளிக்க வேண்டும். அதன்பின் ஒரு வாரத்தில் பயணம் செய்யலாம். இதற்குத் தேவையானவை பின் வருவன:-

வயதெல்லை 21 — 50 வரை

1. Pass port சடவுச் சீட்டு
2. மூன்று (3) பாஸ்போட் சைஸ் படம்
3. வேலைசெய்த தொழில் சான்றிதழ்

இவையாவும் கொண்டு உடன் தொடர்பு கொள்ளவும்.

### 2. Kuwait Cleaners 30 KD

Age 18 — 48 வரை

மற்றும் Kuwait, Singapore, Abudhabi ஆகிய நாடுகளுக்குச் செல்வதற்கு பணிப்பெண்கள (House Maid) தேவை.

போக விரும்புவோர் உடன் 1 முழு சலர் படம், 3 பாஸ்போட் சைஸ் படத்துடன் தொடர்பு கொள்ளவும். போக விரும்பும் யாவரும் எமது காரியாலயத்தில் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,

T. V. TRAVELS
BROWN ROAD :: KOKUVIL.

## ஜே.வி.பி மீதான தடையை நீக்குக!

### ஜனாதிபதிக்கு 7 கட்சிகள் கடிதம்

கொழும்பு, மார்ச் 21

ஜே. வி. பி. மீதான தடையை நீக்கும்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு ஏழு அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன அவையாவன;

சுதந்திரக் கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் லிபரல் கட்சி ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி

ஏழு அரசியல் கட்சிகளும் கூட்டாக இந்த வேண்டுகோளை கடித மூலம் விடுத்துள்ளன. (ஒ-எ)

## வித்தி - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தியானந்தன், மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சிவஞானசுந்தரம் தற்போதைய இயக்குநர் பேராசிரியர் துரைராஜா ஆகியோரின் பெயர்களே சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

ஜனாதிபதியும் உயர்கல்வி அமைச்சருமான ஜே ஆர் ஜெயவர்த்தன மூவரில் ஒருவரை உபவேந்தராக நியமிப்பார்.

தற்போதைய உபவேந்தர் சு வித்தியானந்தன் கடந்த ஒன்பது வருட காலமாக உபவேந்தராகப் பணியாற்றி வருகின்றார்.

இக்கட்டான இவ்வேளையில் புதிய உபவேந்தராக யார் நியமிக்கப்படுவார் என்பதைப் பல்கலைக் கழக வட்டாரங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றன (இ-க)

## இந்திய---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வித்ததாவது:-

இந்திய அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையை மேற்கொள்வதற்கு நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்பது பலராலும் வற்புறுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அதை அமுல்படுத்துவதில் இந்திய அரசு தாமதம் காட்டி வருகிறது.

இதனால் விடுதலைப் புலிகள் தமது கருத்துக்களையோ எண்ணங்களையோ பொதுமக்களிடம் வெளிப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர்.

பொதுமக்களோ அமைதிப்படையினர் தம்மைக் கைது செய்து விடுவார்கள் என்ற காரணத்தினால் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றனர்.

எனவே இந்திய அமைதிப்படையும் விடுதலைப் புலிகளும் யுத்த நிறுத்தத்துக்கான கால எல்லையை பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

மற்றும் பலரும் உரையாற்றினர் [இ-10]

## கும்பாபிஷேகம் நடந்தது

வடமராட்சி, மார்ச் 21

நீண்டகாலமாக பூசை வழிபாடுகளின்றி இருந்து வந்த தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய கும்பாபிஷேகம் நேற்று சிறப்பாகநடைபெற்றது.

கும்பாபிஷேகத்தைக் காண்பதற்காகக் குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான பக்தர்கள் கூடியிருந்தனர்.

சேதமாக்கப்படாமல் நல்ல நிலையில் உள்ள ஆச்சிரம மண்டபங்களில் அன்னதானமும் நடைபெற்றது.

இந்திய அமைதிப் படையினரும் ஆலய வழிபாட்டில் கலந்துகொள்ளக் காணப்பட்டனர். (ஒ-க-160)

## திருட்டு

குருநகர், மார்ச் 21

பட்டப்பகலில் வீட்டு ஜன்னல்கதவின் கம்பியை வளைத்து உள்ளே புகுந்த திருடர் ரொக்கம் 25 ஆயிரம் ரூபா, பதினொரு தங்கப்பவுண் நகைகள், ஒரு கசற்றெக்கோடர் ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

குருநகர் இந்திய அமைதிப்படை முகாமில் இது தொடர்பாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம்நேற்று யாழ் மடத்தடி சதீற்றல் வீதியில் ஒருவீட்டிலேயே நடைபெற்றது. சம்பவம் நடந்தசமயம் வீட்டில் ஆட்கள் இருக்கவில்லை. (இ-51)

## திறந்த--.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளர்களுக்கான இடங்கள் காலியாக உள்ளன.

டிப்புளோமாவில் பெரிட் சித்திபெற்று ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு இதில் முன்னுரிமை வழங்கப்படும்.

பரீட்சை முடிவுகள் வரத் தாமதம் ஆகினும் அவர்கள் பயிற்சியைத் தொடரக் கூடியதாக ஆசிரியர் மாணவர்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது எனவும் ஜனாப் இஸ்மாயில் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-க)

## நீத்தார் பட்டியல்

### இ. த. கிருஷ்ணசாமிப்பத்தர்

திரு. இ. த கிருஷ்ணசாமிப்பத்தர் (இ. த கிருஷ்ணசாமி அன் சன்ஸ், நகைத் தொழிற்சாலை, யாழ்ப்பாணம்) 20-3-1988 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் வாலாம்பிகையின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்) வின் அன்புத் தந்தையும் ரகினியின் அன்பு மாமனும் சுஜீவ், பிரவீண ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 00 மணியளவில் 663, காங்கேசன்துறை வீதியிலிருக்கும்அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பயன் மணல்மயானத்துக்குஎடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ. கணேசராசா

### ஆ. சு. நடராசா

கரம்பன் ஆ. சு நடராசா காலமாகிவிட்டார். இவர் பொன்னம்மாவின் அன்புக்கணவரும், சிவநாதன் (ராசா), ஜெயராணி (கனடா) சிவபாலசிங்கம் (கனடா) ஜெயமகள், பரந்தாமன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், சமலஜோதி, மகாதேவன், விஜயகுமார் ஆகியோரின் மாமனும் யுகாந்தினி, பிரியதர்சினி, உமாவிசாகன், வாகீசன், விஜிதா, முரளி, குமரன், ரமேஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் மரகதம், காலஞ்சென்ற குமாரசாமி ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21 - 3 - 88 திங்கட்கிழமை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: சிவநாதன்


2654

### விசுவநாதர் நடராசா

தெல்லிப்பழை கிழக்கு, கொட்டோலை வாசியும், பிரபல தேசிய உதைபந்தாட்டப் பயிற்சியாளருமாகிய (National Football Coach) விசுவநாதர் நடராசா என்பவர் காலமாகிவிட்டார்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பொன்னம்பலம் சதாசிவம் (சாமியார்)

(உரிமையாளா: சகுந்தலா மெற்றல் வேக்ஸ், குரும்பசிட்டி, தெல்லிப்பழை.)

மலர்வு:- 03- 03 -1918 உதிர்வு:- 14- 04- 1986

திதி:- 22- 03 1988

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு எம்உயிர் உள்ளவரை நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை 22- 03- 88 இல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இத் தருணத்தில் உறவினர்கள், நண்பர்கள், தொழிலாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி. மகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், அண்ணை.

தந்தை இல்லம்,
குரும்பசிட்டி,
தெல்லிப்பழை. (2101)

## 180 ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வன்
சண்முகநாதன் தயானந்தன்
அன்னைமடியில்:
14 5 1958
ஆள்பவன் அழிப்பு:
21-10-1987

முந்நித்தவம் இருந்து முன்னூறு நாட் சுமந்து அந்திபகலாய் ஆகரித்த பெற்றோரை மறந்து பாசமுடன் ஒன்றிணைந்த சகோதரரைப் பிரிந்து ஊரும் உறவும் போற்றும் உற்றாரை விட்டு ஆசையுடன் அன்புவைத்த அயலவரைத் துறந்து இன்பமுடன் இனிதுரைத்தோரை மறந்து வாழ்வது மாயம் என்னும் தத்துவத்தை உணர்ந்து மண்ணுலகை விட்டு விண்ணுலகம் விரைந்து விட்ட எம் செல்வன் தபியின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்கா,
தம்பிமார், தங்கைமார், Uncle.

மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய். [2107]

## 6ஆம் மாத நினைவஞ்சலி



★ படைப்பு 10 — 11 — 1937 ★

★ ஒப்படைப்பு 21 — 10 — 1987 ★

அமரர். க. கிருஷ்ணராசா

(மேற்பார்வையாளர் - யாழ் போதனா வைத்தியசாலை)

எம் இதயத்திலே ஒரு கோயிலாய் நம் துன்பங்களை நீக்கிய தியாகச் சுடராய் எம் நினைவில்குடியிருக்கும் குலவிளக்காய் எம்மை எல்லாம் வாழவைத்த தெய்வமே! உங்கள் இனிய நினைவுகள் என்றுமே மறக்க முடியாதவை நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் - உங்கள் நினைவுகள் எங்களை விட்டுப்பிரியாது.

உங்கள் பிரிவால் கண்ணீர் வடிக்கும்
அன்பு மனைவி: திருமதி ஈஸ்வரி கிருஷ்ணராசா
அன்பு மகள்:பிரேமலதா
மற்றும் பெருமக்கள்

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (2069)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 21-03-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna on Monday, 21st March 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org